**முதன்மை மாவட்ட நீதிமன்றம், செங்கல்பட்டு**

| | | | | |
|---|---|---|---|---|
| **வழக்கு எண்** | OP | 44 | of | 2019 |

**2025-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 10-ம் நாளான இன்று**

**வாதி/பிரதிவாதி மனுதாரர்/எதிர்மனுதாரர்** **தரப்பில் ம.சா.2-வது சாட்சியின் வாக்குமூலமானது 1973 ம் ஆண்டின் சட்டத்தின் விதிமுறைகளுக்கு உட்பட்டு திரு.நாகராஜன், Bench Clerk Grade-I என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு உறுதி செய்யப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **வெங்கடேஷ்** | **தந்தை பெயர்** | |
| **கிராமம்** | | **கணவர் பெயர்** | |
| **ஜாதி** | | **தாலுக்கா** | |
| | | **சமயம்** | |
| **தொழில்** | | **வயது** | |

**நாள்-10.09.2025**

**ம.சா.-2**

**முதல் விசாரணை-**

நான் விபத்தை நேரில் பார்த்த சாட்சி ஆவேன். என்னுடைய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். என்னுடைய ஆதார் அட்டை நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது ம.சா.ஆ.13 ஆகும். மனுப்படி பரிகாரம் வழங்க கோருகிறேன்.

**குறுக்கு விசாரணை-**

எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வரவில்லை. வாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக் கொண்டதன் பேரில் சாட்சியம் அளிக்க வந்தேன். நான் இருசக்கர வாகனத்தில் சம்பவ சமயம் சென்று கொண்டு இருந்தேன். என்னுடைய

வாகனத்தின் பதிவு எண்ணை நான் முதல் விசாரணையில் குறிப்பிடவில்லை. பரசுராமன் ஓட்டிச் சென்ற இருச்சக்கர வாகனத்தின் பதிவு எண்ணை நான் முதல் விசாரணையில் சொல்லவில்லை. நான் சென்ற வாகனத்தை ரமேஷ் என்பவர் ஓட்டிச் சென்றார். நான் பின்னால் அமர்ந்து சென்றேன். நான் சென்ற இருசக்கர வாகனம் ரமேஷிற்கு சொந்தமானது ஆகும். ரமேஷ் பெயரில் உள்ள பதிவு சான்றிதழை தாக்கல் செய்யவில்லை. நான் சம்பவ இடம் செல்வதற்கு 15 நிமிடத்திற்கு முன்பு விபத்து நடந்து விட்டது. நான் சம்பவ இடத்தில் இருந்து 3 கி.மீ துாரத்தில் வந்து கொண்டிருந்த போது சம்பவ இடத்தில் இருந்த என்னுடைய துாரத்து சொந்தம் விபத்து நடந்தது பற்றி சொன்னார். நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை. நான் சம்பவ இடம் சென்ற போது அங்கு இருந்த ஆட்கள் என்னிடம் விபத்து நடந்த விதம் பற்றி சொன்னார்கள். இறந்து போன பரசுராமன் எனக்கு துாரத்து உறவினர் ஆவார். எனவே மனுதாரருக்கு ஆதரவாக இழப்பீடு பெற்று தர வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை-இல்லை.

T CHANDRASEKARAN

Digitally signed by T CHANDRASEKARAN
Location: Principal District Judge, Chengalpattu